செ.வெ.எண்: 37/2021 நாள்: 17.09.2021

# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆப., அவர்கள் (e-SHRAM) தரவு தளத்தில் அமைப்புசாரா தொழிலாளர் பதிவினை துவக்கி வைத்து பயனாளிக்கு அடையாள அட்டையை வழங்கினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், (e-SHRAM) தரவு தளத்தில் அமைப்புசாரா தொழிலாளர் பதிவினை துவக்கி வைத்து பயனாளிக்கு அடையாள அட்டையை வழங்கினார்.

தேசிய அமைப்புசாரா தொழிலாளர்களை இலவசமாக பதிவு செய்வதற்காக (e-SHRAM) எனப்படும் தரவுதளம் இந்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்களை கண்டறிந்து நலத்திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் இதனை செயல்படுத்துகிறது.

மேற்படி (e-SHRAM) தரவு தளத்தில், பொது சேவை மையங்கள் மூலமாக, 18 வயது முதல் 59 வயதிற்குட்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டப் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சிப்பணி மாநகர வளர்ச்சிப்பணி, தெரு வியாபாரிகள், ரிக்ஷா ஓட்டுநர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் (கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள்), வீட்டுப்பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார ஆர்வலர்கள், விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், செங்கல் சூளைத் தொழிலாளர்கள் ஆகியோர் பதிவு மேற்கொள்ளலாம். இவர்கள் ஏற்கனவே தமிழ்நாடு அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்றவர்களாகவும், இ.எஸ்.ஐ, இ.பி.எப்., என்.பி.எஸ். பிடித்தம் செய்பவர்களாகவும் இருக்ககூடாது.

(e-SHRAM) என்ற தரவு தளத்தில் பதிவு செய்வதற்கு ஆதார் அட்டை, ஆதாருடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் ஆகியவை தேவை. மேற்படி பதிவுப்பணியினை செயல்படுத்த, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான செயல்படுத்தல் குழு அனைத்துத் துறை அலுவலர்களையும் உள்ளடக்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தகுதியுடைய அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவரும் அருகிலுள்ள பொதுசேவை மையத்தை அணுகி இத்திட்டத்தின் மூலம் (e-SHRAM) தரவு தளத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்வின் போது, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருமதி.இரா.மலர்க்கொடி, திருப்பூர் மாவட்ட பொதுசேவை மையம் மேலாளர் திரு.எம்.செந்தில்குமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.